மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.205/2022</u>

2026ம் ஆண்டு மார்ச் 13ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>13.03.2026 வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். எனது ஆதார் அட்டையில் ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை வட்டம் இக்கட்டாம்பாளையம் கிராம முகவரியில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் நால்ரோடு கிராமத்தில் உள்ளது. எனக்கு நால்ரோடு கிராமத்தில் தாவா சொத்துகளுக்கு அருகில் எனக்கு பூமிகள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

2. நான் தற்போது குப்ப கவுண்டன் வலசு கிராமத்தில் குடியிருப்பதாக சொல்லி உள்ளதை பொறுத்து நான் ஆவணங்களை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு இந்த வழக்கின் தரப்பினரான பாலசுப்பிரமணியம் என்பவரை தவிர மற்ற தரப்பினர்கள்

யாரும் உறவினர்கள் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் உபய தரப்பினர்கள் அனைவரும் எனக்கு என்ன உறவு முறை என்பதை பொறுத்து நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லவில்லை.

3. 4ம் வாதி பாலசுப்பிரமணியம் என்பவரின் அத்தை பெயர் லட்சுமி அவரது மகள் பெயர் சுதாமணி. மேற்படி சுதாமணி என்பவரை தான் நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் பாலசுப்பிரமணி எனக்கு என்ன உறவு முறை என்றால் தம்பி உறவு முறை. தாவா சொத்திற்கு வடபுறம் யார் யாருக்கு என்னென்ன காலை எண்களில் பூமிகள் உள்ளது என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு மேல்புறத்தில் என்ன வகையான பூமிகள் உள்ளது என்பதும் என்னென்ன புல எண்கள் யார் யார் பெயரில் உள்ளது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறம் மற்றும் கிழபுறம் என்ன காலை எண்கள் யார் பெயரில் உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. தாவா சொத்தை பொறுத்து கடந்த 09.08.1988ல் பாகக்கரார் செய்து கொண்ட போது அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பமோ கையெழுத்துக்கள் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவண சங்கதிகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் ஆமாம். குமாரசாமி அவரது பூமியின் தென்புறம் மற்றும் கிழபுறத்தில் கம்பி வேலிகள் அமைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கம்பிவேலிகளை பாலசுப்பிரமணி என்பவர் உடைத்து விட்டது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் ஆமாம்.

5. அது சம்பந்தமாக குற்றவியல் வழக்குகள் ஏற்பட்டு ஜாமீன் வாங்கிய விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் அது பற்றி சொல்லி தெரியும் நேரில் தெரியாது என்றால் ஆமாம். தாவா தடம் குமாரசாமி என்பவர் பூமியில் உள்ளது என்பது தான் பிரச்சனை என்றால் ஆமாம். காலை எண். 883/ஏ 5–ல் தான் குமாரசாமி பூமி உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. குமாரசாமி பூமியில் உள்ள தடத்தை எடுக்க வேண்டும் என்று தான் வாதிகள் இந்த வழக்கை போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம்.

6. தாவா சொத்து சம்பந்தமாக நான் எந்த பைசலும் பேசியது கிடையாது என்றால் கூப்பிட்டார்கள். நான் பைசல் பேச போகவில்லை. 10.09.2022 ம் தேதி நான் தாவா சொத்திற்கு செல்லவில்லை என்றால் நான் போகவில்லை. இந்த வழக்கின் பிரதிவாதி வாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பான விபரம் எனக்கு தெரியுமா என்றால் சொல்லிக் கொண்டார்கள். சட்டமன்ற தேர்தலில் உபய வாதிகளுக்கு இடையே என்ன பிரச்சனை என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

7. நான் சொல்வது போல் நான் குப்பகவுண்டம்பாளையத்தில் குடியிருக்கவில்லை என்றும் நான் பெருந்துறை வட்டம் இக்கட்டாம்பாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றும் தாவா சொத்தின் அனுபவ சுவாதீனம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் 4 ம் வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் உறவினர் என்பதற்காக நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.03.13 18:42:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்